# எம்ஆர்டி இரயில் சேவை இன்று தொடக்கம்!

## ஜனவரி 16 வரை இலவச பயணம்



(ஐ.எஸ்.சத்தியசீலன்)

கோலாலம்பூர், டிச.16-

கிள்ளான் பள்ளத்தாக்கை திணறடிக்கும் சாலை நெரிசலுக்கு விடை கொடுக்க வந்துள்ளது எம்ஆர்டி இரயில் சேவை திட்டம்! நகரத்தை ஒட்டிய பெரும்பான்மை குடியிருப்புப் பகுதிகளை இப் பெருந்திட்டம் இணைப்பதால், கிள்ளான் பள்ளத்தாக்குப் பகுதிகளில் நாளொன்றுக்கு 120,000 வாகனங்களின் எண்ணிக்கை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுங்கை பூலோவிலிருந்து 23 கிலோ மீட்டர் பயணத்தை உள்ளடக்கிய செமாந்தான் வரைக்குமான முதல் கட்ட எம்ஆர்டி சேவை, இன்று வெள்ளிக்கிழமை அதிகாரப்பூர்வமாக செயல்முறைக்கு வருகின்றது.

12

## எம்ஆர்டி இரயில் சேவை....

இவ்வழி தடத்தில் மிக பிரம்மாண்டமான 12 நிலையங்கள் இணைக் கப்பட்டுள்ளன. அவை சுங்கை பூலோ, கம்போங் செலாமாட், க்வாசா டாமான்சாரா, க்வாசா செண்ட்ரல், கோத்தா டாமான்சாரா, பண்டார் உத்தாமா, தாமான் துன் டாக்டர் இஸ்மாயில், பிலியோ டாமான்சாரா, புசாட் பண்டார் டாமான்சாரா, செமாந்தான் ஆகும். இந்நிலையங்களிலிருந்து அருகிலுள்ள வர்த்தக மையங்களுக்கும் குடியிருப்புப் பகுதிகளுக்கும் செல்ல 112 எம்ஆர்டி பேருந்துகள் இலவச சேவை வழங்குகின்றன.

எம்ஆர்டியின் இரண்டாம் கட்ட மேம்பாட்டுப்பணி செமந்தானிலிருந்து காஜாங் வரைக்கும் தொடரும். 28 கிலோ மீட்டர் பயண தூரத்தையும் 19 நிலையங்களையும் கொண்டுள்ள இச்சேவைத் திட்டம், ஜூலை 2017இல் முழுமையுறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

'எம்ஆர்டி எஸ்பிகே' என அழைக்கப்படும் இந்த சுங்கை பூலோ - காஜாங் இலகு இரயில் சேவை திட்டம், மொத்தம் 51 கிலோ மீட்டர் பயணத் தூரத்தையும் 31 அதிநவீன நிலையங்களையும் கொண்டிருக்கும். இது முற்றிலும் பயன்பாட்டிற்கு திறக்கப்படும் போது, ஒரு மணி நேரத்திற்கு 20,000 பயணிகள் வீதம் நாளொன்றுக்கு 4 லட்சம் பேர் இதில் பயணிப்பர் என்று 'எம்ஆர்டி கார்ப்பரேஷன்' நிறுவனம் தெரிவித்துள்ளது.

பயணிகளின் எண்ணிக்கை அதிகமானால், காலை இரயிலை விட்டு விடுவோம் என ஐயத்தில் சிலர் இருக்கலாம். அதற்கு வாய்ப்பில்லை என்கிறது சேவை வழங்குநரான 'பிரசரானா ரெப்பிட் ரெயில் சென்.பெர்.' நிறுவனம். காலை மாலை உட்பட இதர பரபரப்பான நேரங்களில் 3.5 நிமிடத்திற்கு ஒரு முறை இரயில் சேவை இருக்கும் என அது நம்பிக்கை தெரிவித்தது. பயணக் கட்டணம் வெ.1 முதல் வெ.5.90 வரை (ஒரு வழிப் பயணம்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது வெ.3.90 கட்டணத்தில் சுங்கை பூலோவிலிருந்து செமாந்தான் செல்லலாம் என்று அது கூறிற்று. இதனிடையே, வெ.3,600 கோடி செலவிலான (24 ஏப்ரல் 2015 மதிப்பின் படி) சுங்கை பூலோ - காஜாங் எம்ஆர்டி சேவையின் முதல் பகுதியை நனவாக்கிய பெருமை தேசிய முன்னணி (தேமு) அரசாங்கத்தையே சாரும் என்று சமூகநல ஆர்வலர்கள் சிலர் தங்களின் சமூகவலைத் தளங்களில் பதிவிட்டுள்ளனர்.

நேற்று மாலை, இந்த எம்ஆர்டி சேவையை அதிகாரப்பூர்வமாக தொடக்கி வைக்க வந்த பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப் துன் ரசாக், தமது தலைமையிலான தேமு அரசாங்கம், மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றி விட்டது என்றார். இன்றை நாள் (டிசம்பர் 16) மலேசிய தரை பொது போக்குவரத்து துறையில் புதிய சகாப்தத்தை பதிவு செய்கின்ற நாள் என்றும் அவர் பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

மேலை நாடுகளுக்கு நிகரான பொது போக்குவரத்து வசதிகளை மலேசியா கொண்டிருக்க வேண்டும் என்கிற அரசாங்கத்தின் கனவு, 10 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு மீண்டும் உயிர் பெற்றுள்ளதாக இந்திய அரசியல் கட்சிகள் கோடிகாட்டுகின்றன.

நாட்டின் பொருளாதார நிலை வலுவிழந்து கிடப்பதாக சில தரப்பினர் கூறி வந்தாலும், அரசு திட்டமிட்ட அனைத்து மேம்பாட்டுத்திட்டங்களும் எவ்வித தடையில்லாமல் மளமளவென வளர்ந்து வருவதானது நாடு இன்னும் செழிப்பாகவே இருக்கிறது என்பதை பறைசாற்றுவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்துரைக்கின்றனர். மக்களுக்கு முன்னுரிமை வழங்கி, அடைவுநிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பிரதமரின் கொள்கை, இது போன்ற மேம்பாட்டுத்திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதன் வழி காணமுடிகிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.